செய்தி வெளியீடு

செ.வெ.எண். 25 நாள்.20.01.2020.

**நீலகிரி மாவட்டம் உதகை மத்திய பேருந்து நிலையத்தில் தமிழக அரசின் சார்பில் இன்று (20.01.2020) வட்டார போக்குவரத்து துறையின் மூலம் 31-வது சாலை பாதுகாப்பு வாரத்தினை முன்னிட்டு தலைகவசம் அணிவது குறித்த இரு சக்கர வாகன விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப., மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர்.வி.சசிமோகன்,இ.கா.ப., ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர்.**

நீலகிரி மாவட்டம் உதகை மத்திய பேருந்து நிலையத்தில் தமிழக அரசின் சார்பில் இன்று (20.01.2020) வட்டார போக்குவரத்து துறையின் மூலம் 31-வது சாலை பாதுகாப்பு வாரத்தினை முன்னிட்டு தலைகவசம் அணிவது குறித்த இரு சக்கர வாகன விழிப்புணர்வு பேரணியை துவக்கி வைத்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் கூறியதாவது,

சாலை பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து அனைவரும் அறிந்து கொள்ளும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் சாலை பாதுகாப்பு வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது. அதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டு 20.01.2020 முதல் 27.01.2020 வரை சாலை பாதுகாப்பு வாரமாக அனுசரிக்கப்படுகிறது. இந்த சாலை பாதுகாப்பு வாரவிழாவின் நோக்கமே வாகன ஓட்டிகள் விபத்தில்லாமல் வாகனத்தை இயக்க வேண்டும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இவ்வாண்டு தமிழகத்தை விபத்தில்லா மாநிலமாக மாற்ற வாகன ஓட்டுநர்கள் சாலை விதிகளை மதித்து வாகனத்தை இயக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

இருசக்கர வாகன ஓட்டிகள் கண்டிப்பாக அனைவரும் தலைக்கவசம் அணிந்து பாதுகாப்பான வேகத்தில், இரவில் எதிரில் வாகனம் வரும் பொது ஒளியை குறைத்து, சாலை சந்திப்பில் வரது புறத்திலிருந்து வரும் வாகனங்களுக்கு வழிவிட்டும், முன் செல்லும் வாகனங்களுக்கு போதிய இடைவெளி விட்டும், வளைவு, குறுகிய சாலை, பாலங்கள், மருத்துவமனை, பள்ளிகள் உள்ள இடங்களில் கவனமாக செல்ல வேண்டும். போக்குவரத்து சிக்னல்களை மதித்து, வாகனம் ஓட்டும் போது செல்போன் பயன்படுத்தாது வாகனம் ஓட்ட வேண்டும்.

இப்பேரணியின் நோக்கம் அனைத்து முக்கிய சந்திப்புகள், வாரசந்தைகள், பூங்காக்கள், பேருந்து நிலையங்கள் மற்றும் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மூலம் சாலை பதுகாப்பின் முக்கியத்துவத்தை சாலை பயன்படுத்துவோர் மற்றும் அனைத்து ஓட்டுநர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதாகும். இப்பேரணி உதகை மத்திய பேருந்து நிலையத்திலிருந்து கமர்சியல் சாலை வழியாக சேரிங்கிராஸில் முடியும் என மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தார்.

இப்பேரணியில் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.கதிரவன், துணை காவல் கண்காணிப்பாளர் திரு.சரவணன், போக்குவரத்து ஆய்வாளர்கள் திரு.நல்லதம்பி, திரு.குலோதுங்கன் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.